DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025ம் ஆண்டு நவம்பர் மாதம் செவ்வாய்கிழமை 25ம் நாள் சாட்சியாகிய நிவேதாபிரியதர்சினி என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நிவேதாபிரியதர்சினி | வயது | 32 |
| த/பெ. | பாலாஜி | இனம் | பெண் |
| கிராமம் | அரக்கோணம் | தொழில் | இல்லத்தரசி |
| சமயம் | | தாலூக்கா | |

**C.C.60/2020**

( 2ஆம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர். 1வது எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் இல்லை. எதிரி சார்பாக குவிமுச பிரிவு 317ன் கீழ் அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்.)

<u>முதல் விசாரணை 25.11.2025 அ.சா.5</u>

1. நான் அரக்கோணத்தில் வசித்து வருகிறேன். 2018ம் ஆண்டு பகல் 2 மணிக்கு நான் வயிற்று வலி காரணமாக அரக்கோணத்தில் உள்ள அக்குபன்சர் கிளினிக்கு சென்றேன். சந்தேகத்தின் பேரில் எதிரிகள் மீது புகார் அளித்தோம். தற்போது எனக்கும், எதிரிகளுக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. எதிரிகளை இவ்வழக்கிலிருந்து விடுவிக்க எந்த பிரச்சனையும் இல்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**(மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் கோரிக்கை செய்யப்பட்டு பரிசீலனை செய்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)**

<u>குறுக்கு விசாரணை அரசு தரப்பில்–</u>

2. 19.03.2018ம் தேதி பகல் 2 மணிக்கு அரக்கோணத்தில் உள்ள சிபா அக்குபன்சர் கிளிக் சென்றபோது அங்கு இருந்த எதிரிகள் என்னிடம் தவறான கண்ணோட்டத்தில் எனது சுடிதாரை இழுத்ததாகவும், அவருடன் இருந்த மற்றொரு எதிரி இதை பற்றி வெளியில் சொன்னால் உயிருடன் இருக்க முடியாது என்று மிரட்டியதாக எதிரிகள் மீது புகார் அளித்தோம் என்றால் சரியல்ல.

3. போலீஸ் விசாரணையில் எதிரிகள் என்னை தவறான கண்ணோட்டத்தில் எனது சுடிதாரை இழுத்ததாகவும், அவருடன் இருந்த மற்றொரு எதிரி இதை பற்றி வெளியில் சொன்னால் உயிருடன் இருக்க முடியாது என்று மிரட்டியதாக தெரிவித்து விட்டு தற்போது நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

4. சம்பவம் தொடர்பாக நான் காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை –</u>** இல்லை.

Taken down by me/before me

in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I(FAC),
Arakkonam.